# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## நிலையறி பரீட்சை – 2021

தரம் 6 **கிறிஸ்தவம்** நேரம் -2 மணித்தியாலங்கள்

பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1) உயிர்ப்பின் வெற்றியை முதலாவதாக கண்டவர்கள்
   1. சிறுவர்கள் 3. மேய்ப்பர்கள்
   2. பெண்கள் 4. தூதர்கள்

2) இயேசுவின் சிலுவையைச் சுமப்பதற்கு உதவியவர்
   1. பேதுரு 3. அரிமத்தியாயோசேப்பு
   2. யோவான் 4. சீரேனூர் சீமோன்

3) கடவுளின் நற்செய்தியை கொண்டு வருபவராக அறியப்பட்டவர்
   1. மரியாள் 3. கபிரியேல்
   2. சீடர்கள் 4. பெண்கள்

4) இயேசு பிறந்த ஊர்
   1. பெத்லகேம் 3. எருசலேம்
   2. நாசரேத்து 4. எகிப்து

5) இயேசு எருசலேம் தேவாலயம் சென்றபோது அவருக்கு வயது
   1. 12 வயது 3. 15 வயது
   2. 10 வயது 4. 8 வயது

6) விலங்குகளிடமிருந்து நாம் பெறும் நல்ல பண்புகள்
   1. நன்றியுணர்வு 3. கருணை
   2. சுறுசுறுப்பு 4. மேற்கூறிய யாவும்

7) படைப்புக்கள் எல்லாவற்றிலும் உயர்ந்த படைப்பு
   1. மிருகங்கள் 3. கடல் உயிரினங்கள்
   2. பறவைகள் 4. மனிதன்

8) இயேசு எத்தனையாம் நாள் உயிர்த்தெழுந்தார்
   1. முதலாம் நாள் 3. நான்காம் நாள்
   2. மூன்றாம் நாள் 4. இரண்டாம் நாள்

9) இயேசு யாரிடம் திருமுழுக்குப் பெற்றார்
   1. போதகரிடம் 3. குருவானவரிடம்
   2. திருமுழுக்குயோவானிடம் 4. இறைவாக்கினரிடம்

10) இயேசு பணியை ஆரம்பிக்கும் போது வயது
   1. 30 வயது 3. 31 வயது
   2. 29 வயது 4. 33 வயது

11) இயேசுவின் சிலுவை மரணத்தால் ………………….. கிடைத்தது
   1. மன்னிப்பு 3. திருவிருந்து
   2. பாஸ்கா 4. செய்தி

kalvi.lk

12) செக்கரியா எலிசபெத் என்பவர்களது புதல்வர்

1. பேதுரு
2. திருமுழுக்குயோவான்
3. யாக்கோபு
4. பிலிப்பு

13) யோவானின் திருமுழுக்கால் வலியுறுத்தப்பட்டது

1. மனம் திரும்புதல்
2. திருமுழுக்குப் பெறுதல்
3. பாவமன்னிப்பு
4. கடவுளின் விசுவாசம்

14) இயேசுவை சிலுவையில் அறைந்த இடம்

1. எகிப்து
2. கொல்கொதா
3. சமாரியா
4. சீனாய்

15) இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு…………………அழைத்துச் செல்லப்பட்டார்

1. எருசலேம் ஆலயத்துக்கு
2. பாலைநிலத்துக்கு
3. கலிலேயாவுக்கு
4. ஆலயத்துக்கு

16) "மகனே ஏன் இப்படிச் செய்தாய்" என இயேசுவிடம் வினவியவர் யார்

1. மரியாள்
2. யோசேப்பு
3. சகரியா
4. யோவான்

17) திருவிவிலியத்தின் முதல் நூல் எது

1. விடுதலைப் பயணம்
2. தொடக்கநூல்
3. லூக்கா
4. மாற்கு

18) திருத்தொண்டர்களின் தலைவனாக இருந்தவர்

1. பேதுரு
2. ஸ்தேவான்
3. யாக்கோபு
4. பிலிப்பு

19) தொடக்கத்தில் கடவுள் …………………. ………………….. படைத்தார்

1. விண்ணுலகையும்,மண்ணுலகையும்
2. ஒளியையும், இருளையும்
3. நிலத்தையும் கடலையும்
4. சூரியனையும் சந்திரனையும்.

20) யூதர்களின் வரலாற்றில் முக்கியமான நிகழ்வு

1. பாஸ்கா
2. கிறிஸ்மஸ்
3. விருத்தசேதனம்
4. திருமுழுக்கு

பகுதி 11

எவையேனும் 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

1.
1) படைப்பைப் பற்றிக் கூறும் நூல் எது?
2) முதல் இரண்டுநாள் படைப்புக்களையும் எழுதுக
3) படைப்பு தொடர்பாக உமது கடமைகள் 5 எழுதுக

(2+3+5=10புள்ளிகள்)

2.
1) திருமுழுக்குயோவானின் பெற்றோரின் பெயர்களை எழுதுக
2) இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வை சுருக்கமாக எழுதுக
3) இயேசுவின் திருமுழுக்கு நிகழ்விலிருந்து வெளிப்படும் கருத்துக்கள் மூன்று எழுதுக

(2+3+5=10புள்ளிகள்)

3.
1) பாவம் என்பதனால் நீர் கருதுவது யாது?
2) இறையுறவை நிரந்தரமாக்கும் வழிமுறைகள் 3 எழுதுக
3) நிலை வாழ்வை உரிமையாக இயேசு எமக்கு காட்டிய முன்மாதிரிகள் 5 எழுதுக

(2+3+5=10புள்ளிகள்)

4.
1) இயேசு பாலைவனத்தில் உபவாசம் இருந்த நாட்கள் எத்தனை?
2) இயேசு அலகையினால் சோதிக்கப்பட்ட இரண்டாவது சோதனை என்ன? அதற்கு இயேசு கூறிய பதில் யாது?
3) வாழ்வில் நமக்கு ஏற்படும் சவால்களுக்கு கடவுளின் பிள்ளையாக எவ்வாறு முகம் கொடுப்பீர் என எழுதுக?

(2+3+5=10புள்ளிகள்)

5.
1) இயேசுவின் பிறப்பின் அதிசயத்தை உணர்த்தும் சம்பவங்கள் 2 தருக.
2) குழந்தை இயேசுவை சரியாக இனம் கண்டுகொள்வதற்கு வானதூதர் கூறிய அடையாளம் என்ன?
3) இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் கிறிஸ்தவர்கள் மேற்கொள்ளும் நற்செயல்கள் ஐந்து எழுதுக

(2+3+5=10புள்ளிகள்)

6.
1) பாஸ்காவிழா ஏன் கொண்டாடப்படுகிறது?
2) யூதசட்டத்திற்கு அமைய 12 வயதை அடைந்த ஆண் பிள்ளைகள் என்ன செய்ய சந்தர்ப்பம் கொடுக்கப்படும்?
3) இயேசு 12 வயதில் எருசலேம் தேவாலயம் சென்ற நிகழ்வில் இருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடங்கள் மூன்று தருக.

(2+3+5=10புள்ளிகள்)

7.
1) கடவுள் மனிதனுக்கு கொடுத்த பொறுப்புகள் எவை?
2) சூழல் அழிவுக்கு உட்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக
3) சூழலை பாதுகாக்க உம்மால் செய்யக்கூடிய செயற்பாடுகள் ஐந்து எழுதுக.

(2+3+5=10புள்ளிகள்)

kalvi.lk

8.

1) கொல்கொதா எந்த மொழிச் சொல்?
2) ஆளுநர் பிலாத்துவினால் இயேசுவுக்கு சாட்டப்பட்ட குற்றம் என்ன?
3) இயேசு சிலுவையில் இருந்து கூறிய வார்த்தைகள் 2 தருக

(2+3+5=10புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

# GRADE 6,7,8

# STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page